# இதோ ஒரு தானியத் தீவனம்-பால் உற்பத்தியை அதிகரிக்கும் பலே கோ.எஃப் எஸ் 29

பசுந்தீவனத்துல பலவகை இருந்தாலும், மாட்டுக்குத் தீவனத்தையம் விவசாயிக்கு வருமானத்தையும் தர்றதுல இந்த கோஎஃப்எஸ்-29 தீவனச் சோளத்துக்கு இணை எதுவுமே இல்லீங்க. பால் மாடு வச்சிருக்கற விவசாயிக ஒருமுறை இதை சாகுபடி செஞ்சுட்டா அஞ்சு வருஷம் வரைக்கும் கவலையில்லாம இருக்கலாம். வருஷத்துக்கு 60 டன் தீவனமும், தானியம் மூலமா வருஷத்துக்கு குறைஞ்சபட்டசம் 45 ஆயிரம் ரூபாய் வருமானத்தையும் பாத்துக்கிட்டே இருக்கலாம்" என்று அனுபவப்பாடம் சொல்கிறார் திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், உண்ணியூர் விவசாயி முத்துசாமி மாடுக கழிக்காம திங்கறது தொடர்ந்து பேசியவர் "பசுந்தீவனத்துல புல் வகை, தானிய வகை, பயிர் வகை, மர வகைனு நாலு வகையானத் தீவனங்கள் இருக்கு. இந்த கோ.எப்.எஸ்-29 தீவனம் தானிய வகையைச் சேர்ந்தது. கம்பு, சோளம் மாதிரியான தானிய வகைத் தீவனங்கள்ல இதுதான் அருமையானத் தீவனம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2001-ம் வருஷம் வெளியிட்ட இந்த ரகத்தை, 2003-ம் வருஷத்திலிருந்து நாமக்கல் கால்நடைக் கல்லூரியில் விவசாயிகளுக்கு கொடுத்துகிட்டு இருக்காங்க.

இதோட தண்டு மெல்லிசாவும், இலைகள் (சோகை) அதிகமாகவும் இருக்குறதால, மாடுக கொஞ்சம்கூட கழிக்காம மொத்தத்தையும் தின்னுடுதுங்க. இதுல புரதச்சத்து அதிகமா இருக்குறதால வழக்கமான பால் உற்பத்தியைவிட,மூணு லிட்டர் கூடுதலா பால் கிடைக்குது" என்று ஆச்சரியத் தகவல் சொன்னவர், இந்த தீவனச் சோளத்தைப் பயிரிடும் முறைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.45 நாளைக்கு ஒரு அறுவடை "கோ எஃப் எஸ் -29 வடிகால் வசதியுள்ள அனைத்து நிலத்திலும் வளரும். நிலத்தை புழுதியாக உழுது, கடைசி உழவுக்கு முன்பாக அடியுரமாக 5 டன் தொழுவுரத்தைப் போட்டு, மீண்டும் ஒரு உழவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை 10 கிலோ மணலுடன் கலந்து விதைத்து, மீண்டும் லேசாக ஒரு உழவு செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் விதை மண்ணுக்குள் போய்விடும். உழவுக்குப் பின், பாசன வசதிக்கு ஏற்ப பாத்தி அமைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.ஒரு வார இடைவெளியில் தொடர்ந்து பாசனம் செய்ய வேண்டும்.

விதைத்த 25 முதல் 30 நாட்களுக்குள் மேலுரமாக 18 கிலோ தழைச்சத்து (யூரியா 40 கிலோ) கொடுக்க வேண்டும். விதைத்த 70 நாட்களில் முதல் அறுவடை. அதையடுத்து 45 நாட்களுக்கு ஒரு முறை தொடர்ந்து அறுவடை செய்து கொண்டே இருக்கலாம். பூட்டு (கதிர்) வெளியே வருவதற்கு முன் அறுவடை செய்ய வேண்டும்.செலவு 7 ஆயிரம் வரவு 45 ஆயிரம் முதல் மூன்று அறுவடை வரை, ஒவ்வொரு அறுவடை முடிந்ததும் 18 கிலோ தழைச்சத்து (யூரியா 40 கிலோ) கொடுக்க வேண்டும். நான்காவது அறுவடைக்கு பின், 18 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து (சூப்பர் பாஸ்பேட் 100 கிலோ), 8 கிலோ சாம்பல்சத்து (பொட்டாஷ் 14 கிலோ) ஆகியவற்றை கலந்து கொடுக்க வேண்டும்.ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் ஐந்து அறுவடை மூலம், ஏக்கருக்கு 60 டன் தீவனம் கிடைக்கும்.

இத்தீவனத்தை கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு 15 கிலோவும், ஆடுகளுக்கு அதன் எடையைப் பொறுத்து 5 கிலோ வரை தீவனமாகக் கொடுக்கலாம். விதை தேவைப்பட்டால், 45-ம் நாளில் அறுவடை செய்யாமல்விட்டு, 70-ம் நாளில் சோளக் கதிரை மட்டும் அறுவடை செய்து, தானியங்களைப் பிரித்துக்

கொள்ளலாம். கதிர் அறுவடை செய்தபின், தட்டையை அறுத்து தீவனமாகக் கொடுக்கலாம்.ஒரு ஏக்கரில் கோ.எப்.எஸ். 29 சாகுபடி செய்ய அதிகபட்சம் ஏழாயிரம் ரூபாய் செலவாகும். ஆனால், ஆண்டுதோறும் 60 டன் தீவனம் கிடைக்கும். சந்தையில் ஒரு டன் பசுந்தீவனம் ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகுது. அப்படி பார்த்தா இதன் மதிப்பே 60 ஆயிரம் ரூபாய் இருக்கும். இதைத் தவிர, விதைக்காக விட்டு வைத்தால், ஒரு அறவடையிலேயே குறைந்தபட்சம் 150 கிலோ விதைச்சோளம் கிடைக்கும். இந்த விதைச்சோளம் ஒரு கிலோ 300 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதை வெளியில் விற்றால், 45 ஆயிரம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கும்.எனவே, எப்படிப் பார்த்தாலும் பால் மாடு வளர்க்கும் விவசாயிகளுக்கு இந்த தீவனச் சோளம்நிச்சயம் ஒரு வரப்பிரசாதம்தான் “ என்றார் மகிழ்ச்சியுடன்.

**தொடர்புக்கு :**


முத்துச்சாமி

அலைபேசி 93671-82899

உண்ணியூர், தொட்டியம் வட்டம்

திருச்சி மாவட்டம், விவசாயி முத்துசாமி